செய்தி வெளியீடு எண்:625 நாள் : 06.12.2015

## <u>செய்தி வெளியீடு</u>

சென்னை மாநகராட்சியிலுள்ள 15 மண்டலங்களிலும் 24,500 துப்புரவு பணியாளர்கள் மூலம் தீவிர துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது

சென்னை மாநகராட்சியில் பெரும்பாலான பகுதிகளில் தற்போது மழை நீர், வெள்ளம் வடிந்து வருகின்ற நிலையில், சென்னை மாநகராட்சி மூலம் துப்புரவு பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சியின் 15 மண்டலங்களிலும் துப்புரவு பணிகள் மண்டல மேற்பார்வை அதிகாரிகளால் மிகத் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது. சென்னை மாநகராட்சியில் ஏற்கனவே 22,500 துப்புரவு பணியாளர்கள் துப்புரவு பணி மேற்கொண்டு வருகிறார்கள். தற்போது, கூடுதலாக இதர மாவட்டங்களிலிருந்து 2000 துப்புரவு பணியாளர்கள் வரவழைக்கப்பட்டு மொத்தம் 24,500 துப்புரவு பணியாளர்கள் மூலம் குப்பைகள், கழிவுகள் அள்ளும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. சுகாதார சீர்கேடு ஏற்படுவதைத் தடுக்கும் வகையிலும், நோய் தொற்று ஏற்படாமல் இருக்கவும் குளோரின் பவுடர் மற்றும் பிளீச்சிங் பவுடர் வழங்கப்பட்டுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**